**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.60/2016**

**21.07.2023 - வா.சா. 2 சித்ரா சத்திய பிரமாணத்தின் பேரில் 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என் அக்கா மகன். முதல் விசாரணை வாக்குமூலம் வாதி சொல்லி தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கு விவரங்கள் தெரியும். 1ம் பிரதிவாதி வாதியின் மாமனார். 1ம் பிரதிவாதியின் மனைவி தேவசேனா. தேவசேனாவின் சகோதரர் தான் 2ம் பிரதிவாதி தேவேந்திரன். 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மனைவி. 1ம் பிரதிவாதியின் சகோதரர் 4ம் பிரதிவாதி. வாதியின் இரண்டாவது கணவர் பெயர் மோகன். உறவுக்காரர். இரண்டாவது திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன். முதல் கணவருக்கு திருமணமாகி 8 மாதம் கழித்து பக்கவாதம் வந்தது. திருமணத்தின் போது முதல் கணவர் நல்ல முறையில் தான் இருந்தார். அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு காண்பித்து பின்னர் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்கள். அதன் பிறகு வாதி தாய் வீட்டிற்கு வந்து விட்டார் என்றால் பிரதிவாதி தான் இறக்கி விட்டு விட்டார்கள். அதன் பிறகு கஷ்டம் காரணமாக வேலைக்கு சென்று வந்தார்.

அவர் வேலைக்கு சென்று வந்ததால் அவரது கணவரை பராமரிக்கவில்லை என்றால் பிரதிவாதிகள் விடவில்லை. அவர் கணவர் படுத்த படுக்கையாக திருவண்ணாமலையில் இருந்தார். வாதி செஞ்சியில் வேலை செய்து வந்தார். மறுபடியும் சாட்சி பணிவிடை செய்ததாக சொல்கிறார். வழக்கு சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. மல்லவாடியில் இருப்பதாக கேள்வி பட்டேன். முதல் அயிட்டம் வீடு அது திருவண்ணாமலையில் உள்ளது. அந்த வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். வாதி செஞ்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து 1ம் பிரதிவாதியின் வங்கியில் இருக்கும் பணத்தை எடுக்க விடாமல் தடை உத்தரவு பெற்றார் என்றால் சரிதான்.

அதனால் 1ம் பிரதிவாதி பணம் எடுக்க முடியாததால் சில சொத்துக்களை விற்றார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தன்னுடைய மகனின் மருத்துவ செலவிற்காக 2, 3 பிரதிவாதிகளிடம் சுமார் 30

லட்சம் வரை கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. வாதி 2வது திருமணம் 2018 - 2019ல் நடந்தது. நான் தவறாக சொல்கிறேன் என்றும், 2016 லேயே திருமணம் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் முதல் கணவர் இறப்பிற்கு நாங்கள் செல்லவில்லை என்று சொன்னால் எங்களை கூப்பிடவில்லை.

முதல் கணவர் படுத்த படுக்கையாக இருக்கும் போது வாதிக்கு ஏதாவது வழி செய்யுங்கள் என்று பணம் கேட்டார்கள் என்றால் சரிதான். நான் உடன் செல்லவில்லை. வாதி பணம் கேட்பதில் மட்டும் குறியாக இருந்தார் என்றும், வெங்கட்ராமனை ஒரு மனைவி என்ற அடிப்படையில் எந்த பணிவிடையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியையும், அவரது மகனையும் 2, 3 பிரதிவாதிகள் பராமரித்ததால் 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் மூங்கிதுறைப்பட்டு கிராமத்தில் குடியிருப்பதால் வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் வாதியின் சித்தி என்பதால் உறவுமுறை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சித்ரா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.